அரசியல் விஞ்ஞானம்

க.பொ.த. (உ/த)

புதிய பாடத்திட்டம் – 2017

இறுதிக் கருத்தரங்கு

விரிவுரையாளர்:

A. F. Fasmilkhan

(B.A, PGDE, M.A, M. Phil$_{(R)}$, Dip. in HRM & HR)

- **ABC Education Institute - Henamulla, Panadura.**
- **Education Development Circle - Eluwila, Panadura.**
- **Help Academy - Atulugama.**
- **Beruwala Institue - Beruwala.**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2019

General Certificate Of Education (Adv.Level) – 2019

மாதிரி வினாத்தாள்

அரசியல் விஞ்ஞானம் (23) T I

இரண்டு மணித்தியாலம்

A .F. Fasmilkhan B.A, PGDE, M.A, M.Phil$_{(R)}$, Dip. In. HRM & HR
Teacher : KL/Alaviya M.M.V, Panadura.

❖ **1–12 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் ஒன்று வினாவின் தலைப்பிற்குப் பொருத்தமற்றதாகும். அப்பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.**

1) அரசியல் என்பது:
   1. பிரயோக செயற்பாடுகளைக் கொண்டு சுழலும் போராட்டமாகும்.
   2. தேர்தல் காலங்களில் இதன் வடிவம் மக்களுக்கு புலப்படக்கூடியதாக இருக்கும்.
   3. எண்ணக்கருக்களை உருவாக்குவதில் அதிக கரிசனை கொள்ளும்.
   4. அரசியல் கட்சிகள், அரசியல் வாதிகளை இலக்காகக் கொண்டிருக்கும்.
   5. மோதல், மோதல் முகாமைத்துவங்களாகவும் காட்சியளிக்கும். ( )

2) அரசியல் விஞ்ஞானக் கல்வி:
   1. சமூக விஞ்ஞானங்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது.
   2. தலையாய விஞ்ஞானமாகக் கருதப்படுகிறது.
   3. மனிதனின் அரசியல் நடத்தை தொடர்பாக ஆய்வு செய்கின்றது.
   4. உரோம காலப் பகுதியிலே இதன் பாடப்பரப்புக்கள் விரிவடைந்து சென்றன.
   5. மத்திய காலப்பகுதியிலே அதிகாரம் என்ற கற்கைக்கு முக்கியத்துவமளித்தது. ( )

3) அரசியல் விஞ்ஞானம் ஒரு விஞ்ஞானத்தை விடவும் ஒரு கலையாகக் கருதப்படக் காரணம்:
   1. காரண காரியங்களுக்கிடையில் துள்ளியமான தொடர்பு இன்மையாகும்.
   2. நிச்சயமான எதிர்வு கூறலை மேற்கொள்ளக்கூடிய கோட்பாட்டுத் தளம் இன்மையாகும்.
   3. பாடப் பரப்புகளுக்கிடையில் பொருத்தமான மூலக் கொள்கை இன்மையாகும்.
   4. மானிட நடத்தையோடு இணைந்த பொருத்தமான அளவீடின்மையாகும்.
   5. பாடத்தை கற்பதற்கு பொருத்தமான எண்ணக்கருக்கள் காணப்படாமையாகும். ( )

4) அரசியலை ஆராய்வதற்கான நடத்தைவாத அணுகுமுறை:
   1. ஹாவர்ட் பல்கலைக்கழக அறிஞர்களால் அபிவிருத்தி செய்யப்பட்டது.
   2. இயற்கை விஞ்ஞான முறைகளில் அரசியலை ஆராய வேண்டும் என்கிறது.
   3. 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரபல்யமடைந்தது.
   4. மனிதனை ஆய்வின் கருப் பொருளாக நகர்த்திச் செல்கின்றது.
   5. அரசியல் கற்கைகளில் தத்துவார்த்த அணுகுமுறையை எதிர்க்கின்றது. ( )

5) தேசியவாதம் என்பது:
   1. தேசம் சார்ந்த வெளிப்பாட்டுக் கருத்தியலொன்றாகும்.
   2. சர்வதேச தொடர்பாடலின் போது ஒருமித்து வெளிப்படுவதாகும்.
   3. நவீன அரசுகளின் பிரதான அதிகார மையக்கோட்பாடாகும்.
   4. சுயநிர்ணய அடிப்படையில் தேசத்தை வழிநடாத்தும் வல்லமை பொருந்தியதாகும்.
   5. தேசிய இயக்கமொன்றினூடாக பாரிய வடிவம் பெறக்கூடியதாகும். ( )

6) சமவுடமைவாதம் என்பது:
   1. சமூக சமத்துவத்தை எதிர்க்கும் பிரதான கருத்தியலாகும்.
   2. அரசியல் இயக்கம் புரட்சிகர இயக்கமாக வழியமைத்ததாகும்.
   3. சுரண்டலுக்கு அப்பாற்பட்ட சமூகத்தை உருவாக்குவதாகும்.

4. நிச்சயமற்ற இறுதி இலக்கைக் கொண்ட அரசைப் போதிப்பதாகும்.
5. முதலாளித்துவக் கட்டமைப்பைத் தகர்ப்பது பற்றியதாகும். ( )

7) அரசியல் கட்சிகளின் பணிகள்:
1. சமூக பலத்தை அதிகார பலமாக மாற்றுதல்
2. சமூகத்துக்குத் தேவையான கல்விமான்களை உருவாக்கல்.
3. அரச அதிகாரத்தை கைப்பற்றுவதும் போராடுவதுமாகும்.
4. கருத்தொற்றுமையற்ற அபிப்பிராயங்களை ஒன்று திரட்டுவதாகும்.
5. அரசியல் தலைவர்களை பயிற்றுவிப்பதாகும். ( )

8) அமுக்கக் குழுக்கள்:
1. தேசிய, சர்வதேச மட்டத்தில் அமைந்துள்ள தாபனங்களாகும்.
2. அரச கொள்கை, தீர்மானங்களை உருவாக்கும் பிரதான அரச முகவராகும்.
3. அரசுக்கு சேய்மையிலிருந்து அழுத்தம் கொடுப்பதாகும்.
4. அரசியல் கட்சிகளின் பிரதி உபகாரமாக செயற்படுவதாகும்.
5. வன்முறையற்ற வேலை நிறுத்தங்களை மேற்கொள்வதாகும். ( )

9) சிவில் சமூகம்:
1. தற்கால ஜனநாயகத்தின் செயற்றிறன் மிக்க அமைப்பாகும்.
2. எல்லையற்ற பொதுத்தளத்தில் பயணிக்கக்கூடியதாகும்.
3. அதிகாரப் பிரயோகமற்ற தன்னல தாபனங்களாகும்.
4. அரசாங்கம், குடும்பம், சந்தை என்பவற்றின் வேறுபடுத்தலுக்குட்பட்டது.
5. சுயாதீனமாக இயங்கும் தொண்டர் அமைப்புக்களைக் கொண்டது. ( )

10) ஜனாதிபதித்துவ அரசாங்க முறை:
1. மந்திரி சபையை விட அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை வழங்கவல்லது.
2. ஜனாதிபதி என்ற தனித்த நிர்வாகப் பகுதியால் தலைமை தாங்கப்படுகின்றது.
3. சட்ட, நிர்வாக துறைகளுக்கிடையில் வலுவேறாக்கம் அடிப்படையாகக் காணப்படும்.
4. அரசாங்கம் கூட்டுப் பொறுப்புத்தத்துவத்தின் கீழ் தொழிற்படும்.
5. பன்மைத்துவ சமூக முறைகளைக் கொண்ட நாடுகளுக்குப் பொருத்தமான பிரதியீடாகக் காணப்படும். ( )

11) அமைச்சரவை நிர்வாகமுறை:
1. பிரதம மந்திரியை அரசாங்கத்தின் மாலுமியாகக் கொண்டிருக்கும்.
2. கூட்டுப் பொறுப்புத் தத்துவம் காணப்படும்.
3. சட்டமன்றில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் மாத்திரமே பிரதமராக நியமிக்கப்படுவார்.
4. அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றுவதன் மூலம் அமைச்சரவை பதவி நீங்கும்.
5. அமைச்சர்கள் சட்டமன்றிலிருந்து விடுபட்டு இருத்தலாகாது. ( )

12) மோதல் என்பது:
1. ஆக்கபூர்வமான அல்லது அழிவுபூர்வமான செயன்முறையாகும்.
2. சமூக பல்வகைமையின் தொழிற்பாடு.
3. விருப்பங்களை அடையும் முதல் ஊடகமாகும்.
4. ஆசைகள், பெறுமானங்கள் அடையப்படாத போது பிரயோகிக்கப்படுவது.
5. நீண்ட பொறிமுறையுடன் கூடிய தீர்வு செயன்முறையைக் கொண்டது. ( )

❖ **கீழே தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 13, 14 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

A. வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமை காணல்
B. இரு மட்டங்களில் அரசாங்கம் நடைபெறல்
C. ஒரு மையத்தில் சகல அதிகாரங்களும் ஒன்று குவிக்கப்பட்டிருத்தல்
D. பல்லின சமூகங்களுக்கு மிகவும் பொருத்தமானதாக அமைதல்
E. பிரசைகள் இரு அரசாங்கங்களுக்குக் கீழ்ப்பட்டிருத்தல்
F. இறைமை அதிகாரம் பரவலாக்கப்பட்டிருத்தல்
G. ஒரே நிர்வாக மற்றும் நீதித்துறை முறைமை செயற்படல்
H. அதிகாரம் தகுதி, திறனடிப்படையில் செயற்படுத்தப்பட முடிதல்

13) சமஷ்டி முறைக்குப் பொருந்துகின்ற சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

1) ABED 2) ACDE 3) BDFG 4) EFGH 5) CFGE ( )

14) ஒற்றை ஆட்சி முறைக்குப் பொருந்துகின்ற சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

1) ABCD 2) ACDE 3) BDFG 4) CFGH 5) EFGH ( )

❖ **15 - 25 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

15) காலனித்துவ நாட்டரசின் பண்புகளாவன:

A. குடியேற்ற சமூகத்தின் சேமநலன்களை விருத்தி செய்தல்.
B. குடியேற்ற நாட்டரசின் அபிலாஷைகளை பலவந்தமாக நிறுவுதல்.
C. குடியேற்ற சமூகத்தில் வர்த்தக கட்டுப்பாடுகளை விதித்தல்.
D. காலனித்துவ சமூகத்தின் கருத்தியலை உட்புகுத்தல்.
E. அந்நிய சக்திக்கெதிராக வரும் பலமான எதிர்ப்புக்களை அடக்குதல்.

1)ABCD 2) ACDE 3) ABDE 4) ABCE 5) BCDE ( )

16) கோல்புறூக், கமரன் ஆணைக்குழுவினர்:

A. முதலாளித்துவ பொருளாதார முறையின் அபிவிருத்திக்கான தளத்தினை இட்டனர்.
B. ஜனநாயக ஆட்சிக்கான முத்துறை தாபனங்களையும் நிறுவினர்.
C. சட்டசபையில் சபாநாயகர் முறைமையை அறிமுகம் செய்தனர்.
D. இலங்கையை ஒருங்கிணைந்த நிர்வாக முறைமைக்குள் அமர்த்தினர்.
E. குடியியல் மற்றும் குற்றவியல் மேன்முறையீடுகளை விசாரணை செய்வதற்கான அதிகாரத்தை நீதிமன்றுக்கு வழங்கினர்.

1) ABCD 2) ACDE 3) ABDE 4) ABCE 5) BCDE ( )

17) 1910 – 1924 காலப்பகுதியில் இடம்பெற்ற சீர்திருத்தங்களின் முக்கிய அம்சங்களாவன:

A. சட்ட சபையின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படல்
B. தேசாதிபதியின் அதிகாரம் படிப்படியாக குறைக்கப்படல்
C. தேர்தல் மூலமாக தெரிவானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படல்
D. இலங்கை தலைவர்களுக்கு பொறுப்பும் அதிகாரமும் அதிகரித்துச் செல்லல்

E. சட்ட நிர்வாக சபையில் உத்தியோக பற்றற்ற உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படல்

1) ABCD 2) ACDE 3) ABDE 4) ABCE 5) BCDE ( )

18) டொனமூர் யாப்பு முன்வைத்த பரிந்துரைகள்:

A. அதிகார விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட தேசாதிபதியை கட்டமைத்தல்.
B. இனவாத அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தல்
C. லிபரல்வாதக் கொள்கையினைக் கொண்ட அரசாங்கமுறையை தாபித்தல்.
D. ஆட்சியியலை நிர்ணயிக்கும் சுயாதீன பகிரங்க சேவையை தாபித்தல்.
E. சுதந்திரமான ஊழியச் சந்தை முறையொன்றைப் பேணல்.

1) ABCD 2) ACDE 3) ABDE 4) ABCE 5) BCDE ( )

19) சோல்பரி யாப்பின் முக்கிய பண்புகளாவன:

A. இரண்டு சபைகளைக் கொண்ட பாராளுமன்ற முறை உருவாக்கப்பட்டது.
B. இறைமை அற்ற பாராளுமன்ற முறை உருவாக்கப்பட்டது.
C. பாராளுன்றத்தின் சட்டவாக்க அதிகாரங்கள் வரையறைக்கு உட்பட்டது.
D. அடிப்படை உரிமைகள் சுதந்திரங்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டது.
E. சுதந்திரமான நீதிச்சேவை ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.

1) ABCD 2) ACDE 3) ABDE 4) ABCE 5) BCDE ( )

20) முதலாம் குடியரசு யாப்பின் பரிந்துரைகள் :

A. சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளை உள்ளடக்குதல்.
B. அமைச்சரவைக்குட்பட்ட அரசசேவை ஆணைக்குழுவை தாபித்தல்.
C. சட்டத்துறைக்குக் கட்டுப்பட்ட அமைச்சரவையைத் தாபித்தல்.
D. நீதித்துறையை நாட்டில் பலம்மிக்க தாபனமாக மாற்றுதல்.
E. தேசிய அரசுப்பேரவையை குடியரசின் அரச தத்துவமாகக் கட்டமைத்தல்.

1)ABCD 2) ACDE 3) ABDE 4) ABCE 5) BCDE ( )

21) 1972 ஆம் ஆண்டு யாப்பின் சட்டத்துறையானது:

A. இரு சபைகளைக் கொண்ட சட்டத்துறை.
B. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓரங்க சட்ட சபையாய் இருந்தது.
C. சட்டத்துறையில் மீயுயர் கருவியாக இருந்தது.
D. 6 வருட பதவிக் காலத்தை உடையதாக இருந்தது.
E. சட்ட நிர்வாக நீதி அதிகாரங்களைக் கொண்டது.

1) ABCD 2) ACDE 3) ABDE 4) ABCE 5) BCDE ( )

22) 1978 அரசியலமைப்பின் கீழ் இலங்கை பாராளுமன்றமானது:

A. 5 வருட பதவிக் காலத்தை உடையது.
B. சட்டவாக்கத்தில் இறைமை பொருந்திய பாராளுமன்றம்.
C. 225 உறுப்பினர்களைக் கொண்டது.
D. தேசிய பட்டியலில் இருந்து 29 உறுப்பினர்களைக் கொண்டது.
E. கடந்த காலங்களையும் உள்ளடக்கும் வகையில் சட்டங்களை இயற்ற முடியும்.

1) ABCD 2) ACDE 3) ABDE 4) ABCE 5) BCDE ( )

23) இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் ஜனாதிபதி:

A. அரசு, அரசாங்கம் என்பவற்றின் தலைவராவார்.
B. குற்றப்பிரேரணை ஒன்றின் மூலம் நீதிமன்றத்தினால் பதவி நீக்கப்படக்கூடியவர்.
C. ஒரு தவணைக்குரிய பதவிக்காலமாக 6 வருட காலத்தைக் கொண்டிருக்கவில்லை.
D. நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட ஆட்சித்துறை தத்துவத்தை பிரயோகிக்கின்றார்.
E. தான் விரும்புகின்ற அமைச்சுப் பொறுப்பை தாமே வைத்திருக்கும் அதிகாரம் செலுத்துகிறார்.

1) ABCD 2) ACDE 3) ABDE 4) ABCE 5) BCDE ( )

24) 1978 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம்:

A. சுயாதீனத் தன்மை கொண்டது.
B. நீதி ஆலோசனை அதிகாரம் கொண்டது.
C. இறுதிப் பதிவேட்டைக் கொண்டது.
D. அரசியலமைப்புக்கு எதிரான சட்ட, நிர்வாகத் துறைகளின் முடிவுகளுக்கு ரத்ததிகாரம் கொண்டது.
E. அடிப்படை உரிமைகளை விசாரிக்கும் நியாயாதிக்கம் கொண்டது.

1) ABCD 2) ACDE 3) ABDE 4) ABCE 5) BCDE ( )

25) 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம்:

A. ஒருவர் இரு தவணைகளுக்கு மாத்திரமே ஜனாதிபதியாகலாம் என்ற வரையறை.
B. தேசியளவில் தாக்கம் செலுத்தும் பதவிகளையும் ஆணைக்குழுக்களையும் அரசியலமைப்புப் பேரவையோடு இணைந்து ஜனாதிபதி நியமித்தல்.
C. ஜனாதிபதியின் அதிகாரம் மீது வரையரையற்ற கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.
D. 10 உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்புப் பேரவையை தாபித்தல்.
E. 18 ஆவது திருத்தத்திற்கு மாற்றீடாக 17 ஆவது திருத்தத்தின் பண்புகளை ஒத்திருத்தல்.

1) ABCD 2) ACDE 3) ABDE 4) ABCE 5) BCDE ( )

❖ **26 – 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்குப் பின்வரும் அட்டவணை I இற்கான வழிகாட்டிகளிலுள்ள 1,2,3,4,5 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகின்றது என்பதைத் தெரிவு செய்து அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

அட்டவணை I இற்கான வழிகாட்டி

இலக்கம்	கூற்றுI	கூற்றுII
1	உண்மை	உண்மை
2	உண்மை	பொய்
3	பொய்	உண்மை
4	பொய்	பொய்
5	உண்மை	உண்மை என்பதுடன் முதலாவது கூற்றைத் தெளிவாக விளக்குகிறது.

கூற்றுI	கூற்றுII
26) மக்களுடைய மக்களிலான மக்களுக்கான அரசாங்கம்''**A.V.டைசி**	''சகல அரசியலும் அதிகாரத்துக்கான போராட்டமே அன்றி வேறில்லை.'' **மோகன்தோ** ( )
27) 19 ஆம் திருத்தத்தின்படி பாராளுமன்றின் 2/3 பெரும்பான்மையின் விருப்பத்தோடு ஜனாதிபதி எந்நேரமும் பாராளுமன்றத்தை கலைக்கலாம்.	19 ஆம் திருத்தத்தின்படி தேசிய அரசாங்கம் அமைக்கும் பட்சத்தில் ஜனாதிபதி அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். ( )
28) இலங்கை மற்றும் பிரித்தானிய அரசியலமைப்பு ஒற்றையாட்சி அரசியலமைப்பாகும்.	அமெரிக்கா மற்றும் இந்தியா என்பன தூய சமஷ்டிக்குரிய நாடுகளாகும். ( )
29) சமூக செயற்பாட்டின் பல்வேறு படித்தரங்களில் மோதலும் ஒன்றாகும்.	அரசொன்றில் வாழும் மக்களின் பொது அபிலாசைகளை அடையும் முயற்சி பொதுக் கொள்கையாகும். ( )
30)உலக சமாதனத்தையும் பாதுகாப்பையும் உறுதிசெய்ய 1946 ஆம் ஆண்டு ஐ.நா சபை உருவாக்கப்பட்டதாகும்.	இரு வல்லரசுகளுக்கும் சார்பில்லாத கொள்கை பின்பற்றுவதற்காக 1961 ஆம் ஆண்டு 3ஆம் மண்டல நாடுகளால் அணிசேரா அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. ( )

பகுதி (A)

31) அரசியல் செய்தல் என்பதற்கு இரு உதாரணங்கள் தருக.

……

……

32) கிரிட்டோ, ஒப்பீட்டு அரசியலுக்கான அடிப்படை ஆகிய நூல்களை எழுதிய அறிஞர்களை குறிப்பிடுக.

…… ……..

33) 21 ஆம் நூற்றாண்டின் ஒப்பீட்டு அணுகுமுறை மூன்று பிரவுகளாக பாகுபடுத்தப்படுகின்றது. அவற்றில் இரண்டைக் குறிப்பிடுக.

…… ……..

34) ''குலத்தின் தலைமைத்துவக் குழுவின் மூலம் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்''
''சமூகத்தில் உள்ள பலவீனர்களுக்கு உதவுவதன் மூலம் அரசு கொடையாளி என்ற அந்தஸ்த்தைப் பெறுதல்'' மேற்கூறப்பட்ட கூற்றில் குறிப்பிடப்பட்ட இரு அரச முறைகளையும் குறிப்பிடுக.

…… ……..

35) ''மக்கள் தமது பாதுகாப்புக் கருதியும் எதிர்கால நலன்கருதியும் ஒப்பந்தமொன்றைச் செய்து அரசை உருவாக்கினார்கள்''
''மதமானது மனிதர்களை நல்வழிப்படுத்தவல்லது: என்றாலும் அரசியலில் மதத்தையோ அல்லது மதத்தில் அரசியலையோ அங்கீகரிக்க முடியாது. மேற்கூறப்பட்ட கூற்றில் குறிப்பிடப்பட்ட அரசியல் கருத்தியல்களைக் குறிப்பிடுக.

…… ……..

36) பின்வரும் கூற்றில் குறிப்பிடப்பட்ட அரசியல் எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.
"பங்கீடு செய்து கொண்ட நோக்கங்கள், பெறுமானங்கள் என்பவற்றை அடைந்து கொள்ள அதிகாரத்தைப் பிரயோகிக்காது இருத்தல்"
"தனது எல்லைக்குட்பட்ட யாவற்றின் மீதும் பிரயோகிக்க அரசுக்குள்ள உயர்ந்தபட்ச அதிகாரம்"

…… ……..

37) அர்த்த ஜனாதிபதி அரசியலமைப்பின் பண்புகள் இரண்டு தருக.

……
……

38) சமஷ்டி அரசியலமைப்பு உருவாகுவதற்கான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.

……
……

39) மோதல் தீர்வு செயன்முறைகளில் இரண்டு படிமுறைகளைக் குறிப்பிடுக.

…… ……..

40) 1833 சீர்திருத்தத்தின் கீழ் பின்வரும் இரு கூற்றுக்களோடு தொடர்புபடும் நபர்களைக் குறிப்பிடுக.
"இலங்கையில் புதிய சட்ட நிருவாக மற்றும் பொருளாதார முறைகளில் சிபாரிசுகளை மேற்கொள்ளல்" "பாரம்பரிய நீதிமுறைகளில் இருந்து விலகி புதிய நீதித்துறையை தாபித்தல்"

…… ……..

41) பின்வரும் கூற்றுக்களோடு தொடர்பான சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.
"சட்டசபையில் படித்த இலங்கையர் ஒருவருக்கான பிரதிநிதித்துவத்தை வழங்குதல்"
"சட்டசபையில் இந்தியத் தமிழர் ஒருவருக்கான பிரதிநிதித்துவத்தை வழங்குதல்"

…… ……

42) டொனமூர் யாப்பின் சட்டத்துறை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு, சபையின் முதலாவது சபாநாயகரின் பெயரையும் குறிப்பிடுக.

…… ……..

43) சோல்பரி அரசியலமைப்பு இரு அரசியலமைப்பு கட்டளைச் சட்டங்களையும் மூன்று ஒப்பந்தங்களையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அவற்றைக் குறிப்பிடுக.

…… ……
…… ……

44) 1972 அரசியல் அமைப்போடு தொடர்பாக கீழே தரப்பட்டிருக்கும் கூற்றோடு தொடர்பான இரண்டு தாபனங்களை குறிப்பிடுக.
"அரசியல் அமைப்பின் அடிப்படை சட்டத்தின் மூலம் யாப்பின் மீயுயர் கருவியாக தாபிக்கப்படல்"
"அரசாங்கத்தை நெறிப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் பொறுப்பான நிறுவனம் தாபிக்கப்படல்"

…… ……..

45) 1972 அரசியலமைப்பின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையும் அந்நீதிபதிகளின் பதவிக்கால எல்லையும் குறிப்பிடுக.

…… ……..

46) 1978 ஆம் ஆண்டு குடியரசு ஜனாதிபதியோடு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுக்கான விடைகளை தருக.
''பாராளுமன்றம் முன்னதாக வேண்டிக்கொண்டாலொழிய ஜனாதிபதி சுயவிருப்பில் பாராளுமன்றத்தை கலைக்கும் காலம்''
''பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் பதவியிலிருக்கும் ஜனாதிபதி புதிய தேர்தலுக்கான அறிவிப்பைச் செய்யும் காலம்''

…… ……

47) 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்போடு தொடர்பான பின்வரும் பதவி நிலைகளைக் குறிப்பிடுக.
''அரச அலுவலர்கள் அல்லது பிற நிறுவனங்களின் ஊழியர்கள் இழைக்கும் அடிப்படை உரிமை மீறல்களை விசாரணை செய்ய ஜனாதிபதியால் நியமனம் செய்யும் பதவி''
''பாராளுமன்ற விவகாரங்களை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசின் அனுமதியோடு நியமிப்பது''

…… ……..

48) ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பின் இயல்புகள் இரண்டு தருக.

……

……...

49) சார்க் அமைப்பின் நோக்கங்கள் இரண்டு தருக.

……
……

50) சர்வதேச அரசியலில் ஈடுபடும் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் இரண்டைக் குறிப்பிடுக.

…… ……..

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2019

General Certificate Of Education (Adv.Level) – 2019

மாதிரி வினாத்தாள்

அரசியல் விஞ்ஞானம் (23) T I

இரண்டு மணித்தியாலம்

A .F. Fasmilkhan B.A, PGDE, M.A, M.Phil$_{(R)}$, Dip. In. HRM & HR
Teacher : KL/Alaviya M.M.V, Panadura.

பகுதி (I) இருந்து ஒரு வினாவையும், பகுதி (II) இருந்து இரு வினாக்களையும் பகுதி (III) இருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்க.

பகுதி (I)

01. "கால மாற்றங்களுக்கேற்ப வளர்ச்சியடைந்து வரும் பாடத்துறையில் முதன்மையானது அரசறிவியலாகும்" அந்த வகையில் அரசியல் கற்கையின் பாடப்பரப்பைக் குறிப்பிட்டு விளக்குக.

02. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டினைப் பற்றி ஆராய்க.
    I. அரசியலும், அரசறிவியலும்
    II. அரசியலை கற்பதற்கான முறைகள்
    III. பெண்ணியல்வாத அணுகுமுறை

03. பின்வருவனவற்றில் இரண்டினைப் பற்றி விளக்குக.
    I. அரசின் பணிகள்
    II. நவீன ஆள்புல அரசின் அங்கங்கள்
    III. அரசியல் கட்சிகளின் பணிகள்
    IV. தேசியவாதம்

பகுதி (II)

04. பிரித்தானிய நாட்டாட்சிக் காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களை விமர்சன ரீதியாக ஆராய்க.

05. 1931 மற்றும் 1947 ஆம் ஆண்டு யாப்பை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் எவையேனும் இரண்டு தலைப்புகளுக்கு விடைதருக.
    I. டொனமூர் யாப்பின் தேசாதிபதி
    II. சர்வஜன வாக்குரிமையின் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள்
    III. 1947 யாப்பின் அமைச்சரவை
    IV. 1947 யாப்பின் பிரதிநிதிகள் சபை

06. 1972 ஆம் ஆண்டு குடியரசு யாப்பின் கீழ் பின்வருவனவற்றைப் பற்றி விளக்குக.
    I. சட்டத்துறையின் கட்டமைப்பு
    II. ஜனாதிபதியின் அதிகாரம், கடமை, பணிகள்

07. 1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் பின்வரும் தலைப்புகளில் இரண்டினைப் பற்றி ஆராய்க.
    I. ஜனாதிபதியும் பாராளுமன்றமும்
    II. உயர்நீதிமன்றத்தின் அதிகாரம், பணிகள்
    III. 19 ஆம் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கான கட்டுப்பாடு

பகுதி (III)

08. மோதல் என்பதை வரைவிலக்கணப்படுத்தி, மோதல் தீர்வு செயன்முறையின் படிமுறைகளை ஆராய்க.

09. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டினைப் பற்றி ஆராய்க.
    I. பாதுகாப்பு சபையின் நோக்கங்கள்
    II. சார்க் அமைப்பின் பணிகள்
    III. சர்தேச அரசியல் செயற்பாட்டாளர்கள்

10. ஐக்கிய அமெரிக்க சமஷ்டி அரசியலமைப்பின் இயல்புகளைக் குறிப்பிட்டு மத்திய மாநிலங்களுக்கான அதிகார பங்கீட்டு முறைகளையும் ஆராய்க.